மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, * * என்று சொன்னேன். அதை நீக்கிவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசும்போதே நானும் நினைத்தேன். அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல, குறைபாட்டை நிவர்த்தி செய்யலாம்.

புதிய ரேஷன் கார்டுகள்.

49—(*வினா எண். 10059)—திரு. வி. பி. சிந்தன் மற்றும் திரு. செ. செம்மலை: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ரேஷன் கார்டுகள் இந்த ஆண்டுடன் காலாவதியாவதைக் கணக்கில் கொண்டு, மீண்டும் புதிய கார்டுகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) இதுவரை கார்டு இல்லாதவர்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்ய அரசு வசதி செய்து தருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) வசதிசெய்துத் தரப்படும்.

திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவரவர்களே, தற்போதுள்ள முறையில் ஏதாவது குறைபாடுகள் காணப்படுகின்றன என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா? அப்படி கொண்டுவரப்பட்டிருக்குமானால், புதிதாக குடும்ப அட்டைகள் வழங்கப்படும் காலக்கட்டத்தில் அந்தக் குறைபாடுகளைக் களைவதற்கு புதிய வழிமுறைகளை அரசு ஆராய்ந்து, அமுல்படுத்த இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தற்போதுள்ள முறையில் போலி கார்டுகள் சில வழங்கப்பட்டிருக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டு, அதன்மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும் தகுதியான குடும்பங்களுக்கு ரேஷன்

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1986 நவம்பர் 18]

கார்டுகள் தரப்படவில்லை என்ற குறைபாடும் இருக்கிறது. ஆகவே, பழைய கார்டுகளை அறவே நீக்கிவிட்டு, அவரவர்களுடைய வருமானத்திற்கேற்ப எல்லோருக்கும் புதிய ரேஷன் கார்டுகளைத் தக்க முறைப்படி, ஒழுங்காகத் தர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வரவர்கள் உத்திரவிட்டிருக்கிறார்கள். அரசு அதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகிக்கப்படுகிறபோது இரண்டு தவறுகள் நடைபெறுவதாகப் பொதுமக்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். ஒன்று, எடையில் தவறு பெரும்பாலாக ஏற்படுகிறது. இன்னுமொன்று, அந்த நியாய விலைக் கடைகளுக்கு வருகிற உணவுப் பொருள்களை ஒட்டு மொத்தமாக மொத்த வியாபாரிகளுக்கு விற்றுவிடுகிறார்கள் என்பது. அது உண்மையாக இருந்தால் நடைமுறையில் அதற்கு வாய்ப்பு இருந்தால், இந்தக் குறைபாடுகளைக் களைய வேண்டும். எனவே, கார்டுகளுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் கொடுக்கும்போது, அவற்றை பாக்கெட் முறையில் விநியோகிக்கலாம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, பாலிதீன் பைகளில் உணவுப் பொருள்களைப் போட்டு, விநியோகிக்க அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, இது நல்ல யோசனை. ஆனால், நம்முடைய நாட்டில் சில இடங்களில் வியாபாரிகள் ரொம்பவும் கெட்டிக்காரர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ரேஷன் கார்டுகளை விலைக்கு வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கார்டுகள் மூலம் அவர்கள் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. இந்தக் குறைபாடுகளை எல்லாம் எப்படித் தவிர்க்கலாம் என்று அரசு யோசித்து வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[முற்பகல் 9–20]

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, புதிய கார்டுகள் வழங்குவதற்கான வாய்ப்புகள் ஏற்படும் என்பதை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். புதிய கார்டுகள் கிராமப்பகுதிகளில் வழங்குகின்றபோது கிடைத்தவர்களுக்கும் கிடைக்காதவர்களுக்கும் சேர்த்து வழங்கப்படும் என்று சொல்கின்றார்கள். இன்னொன்று சொல்லிக்கொள்கிறேன். உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றிருக்கின்ற நேரத்தில் உள்ளாட்சி மன்றங்கள் மூலம் அல்லது தண்டோரா மூலம் புதிய கார்டுகளை உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒப்படைத்து அவர்கள் மூலம் புதிய கார்டுகள் மக்களுக்கு கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்துமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அது சாத்தியம் ஆகாது. ஏனென்றால் உள்ளாட்சி மன்றத்தினர் ஒழுங்காக கொடுத்தாலும் வோட்டுப் போட்டவர்கள் வோட்டு போடாதவர்கள் என்று பார்த்து கொடுத்து விட்டார்கள் என்ற வீண் பழி வந்துவிடும். ஆகவே, அந்த யோசனை ஏற்க முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கார்டுகள் புதிதாக வழங்கப்படும்போது விடுபட்டவர்களுக்கும் வழங்கப்படும் என்று சொன்னார்கள். விடுபட்டுபோய் இருப்பவர்கள் பூரா பேர்களுக்கும் எப்போது வழங்கப்படும்? போலி கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். இதுவரையிலும் எத்தனை கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வரும் ஆண்டு அத்தகைய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வதாக இருக்கிறோம். 1986 ஜூலை மாதத்தில் தணிக்கைப்படி 5 மாவட்டங்கள் நீங்கலாக மொத்தம் 69,238 குடும்ப கார்டுகள் போலி என்று கண்டுபிடிக்கப்பட்டன.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறை அதிகாரிகள் மாற்றம் காரணமாக இடம்விட்டு வேறு ஊர்களுக்கு மாறி செல்கின்றபோது அவர்களுக்கு வேண்டிய ரேஷன் பொருள்கள் உடனடியாக அவர்கள் வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்படும் என்கிற அளவில் அட்டைகளை ஏற்றுக் கொண்டு இதிலே கால தாமதம் ஏற்படாமல் உடனடியாக ரெனீவல் செய்துகொள்ள துறை பரிசீலிக்குமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பரிசீலிக்கப்படும்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எல்லோருக்கும் புதிய கார்டுகள் வழங்கும்போது, இதுவரையில் கார்டு இல்லாதவர்களுக்கும் கணக்கெடுத்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. சாதாரண கார்டுகள் புதிய கார்டுகள் வழங்கும் சந்தர்ப்பத்தில், எல்லாக் கார்டுகளை புதுப்பித்துக் கொடுக்கும்போது, இந்த இடைக்காலத்தில் பல குடும்பங்களில் இடம் மாற்றம் ஏற்பட்டு இருக்கும். புதிய குடும்பங்கள் உருவாகியிருக்கின்ற நிலைமைகள் ஏற்பட்டு இருக்கும். அப்படிப்பட்டவர்களுக்கு ரேஷன் கார்டுகள் கொடுக்க எந்தவிதமான நடவடிக்கை

1986 நவம்பர் 18]

யும் இல்லை. இதில் மாவட்ட ஆட்சியாளர் அல்லது மாவட்ட சப்ளை ஆபிசர்ஸ் போன்றவர்களுக்கு அதிகாரம் கொடுக்கலாம். ரொம்ப கீழே இருப்பவர்களுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும் என்று சொல்லவில்லை. அவர்கள் கொடுக்கின்ற விண்ணப்பங்களை உடனடியாக பரிசீலித்து அவர்களுக்கு கார்டு கொடுக்க ஏற்பாடுகள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச, இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு இதைப்பற்றிப் பரிசீலித்து முடிவெடுக்கும்.

ஏழைக் குழந்தைகளுக்கு இலவச பாடப் புத்தகங்கள் வழங்கல்.

50—(*வினா எண். 5322)—**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை படிக்கும் ஏழை குழந்தைகளுக்கு இலவசமாக பாடப் புத்தகங்களை வழங்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) முதலமைச்சர் சத்துணவு திட்டத்தின் கீழ் பயன்பெறும் 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் அனைத்து ஏழைச் சிறுவர்களுக்கும் இலவசமாக பாடப் புத்தகங்கள் (துணைப் பாடங்கள் நீங்கலாக) வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஏழை மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்குகின்ற திட்டத்திலே பரீட்சை முடிகின்ற வரையிலே புத்தகங்கள் வந்து சேருவதில்லை என்ற புகார்கள் வந்திருக்கின்றன. அதை சீர்படுத்தி, உரிய நேரத்தில் புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தேர்வு நேரம் வரை புத்தகங்கள் வருவதில்லை என்பது சரியாக இருக்கமுடியாது. காலதாமதம் இருக்கின்றது என்றால் அதற்கான தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.